விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
## VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(கி-1980)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 2 புதன்கிழமை 16-05-2001 தொலை பேசி: 3378 ஒலி 148

★ தூதுவர் எரிக்சோல் கொழும்பு வருகை

# ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு

# இன்று வன்னிக்குச் செல்கிறார்!

## தலைவர் பிரபாவை சந்திப்பார்?

(நமது நிருபர்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சுமூகமான சூழ்நிலையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் நோக்குடன் நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம் நேற்றுக் காலை 6-05 மணிக்கு இலங்கை வந்து சேர்ந்துள்ளார்

இலங்கை வந்துசேர்ந்துள்ள எரிக்சோல்ஹெய்ம் நேற்றுமாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பை அடுத்து எரிக்சோல் ஹெய்ம் இன்று வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் சந்திக்கவுள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகப் பேச்சாளர் ஒருவர்தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான உறவுகள் முறிந்து சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாமல் போகலாம் என்ற பரவலான ஊகத்தின் மத்தியில் நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம் நேற்று இலங்கை வந்துசேர்ந்தார்.

இலங்கை வந்துள்ள அவர் அரசையும் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கான கடினமான பணியில் ஈடுபட்டுள்ளார்.

இப்பணியின் முதற்கட்டமாக முஸ்லிம் காங்கிரஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## குறை நிவர்த்தி சேவையில் தே.அ.அட்டை பெறமுடியும்

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் 19 ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள மக்கள் குறை நிவர்த்தி சேவையில் தேசிய அடையாள அட்டை வழங்கும் கொழும்பு ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் யாழ் வருகைதரவுள்ளனர்.

இதுவரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலியா நுழைய முயன்ற ஏழு இலங்கையர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு நுழைய முயன்றஏழு இலங்கையர்களை அவுஸ்திரேலியா பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கடலில்வைத்து கைதுசெய்யப்பட்ட இவ் ஏழுபேரும் அவுஸ்திரேலிய நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படும் பட்சத்தில் இருபது வருடங்களுக்குக் குறையாத கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந 5)

...பேச்சுக்கள் நடைபெறாமல் போகலாம் என்ற பரவலான ஊகத்தின் மத்தியில் நோர்

...இலங்கை வந்துள்ள அவர் அரசையும் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்கு

...மாக முஸ்லிம் காங்கிரஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

...ளனர்.

கடலில்வைத்து கைதுசெய்யப்பட்ட இவ் ஏழுபேரும் அவுஸ்திரேலிய நீதிமன்றத்

...குறையாத ...டுழிய சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந 5)

# தமிழக அ. இ. அ. தி. மு. கவுடன் அரசு நல்லுறவைப் பேண வேண்டும்

## சிஹல உறுமய செயலாளர் ஆலோசனை

(கொழும்பு)

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டது.

என்வே அக்கட்சியுடன் அரசாங்கம் நல்லுறவைப் பேணி விடுதலைப் புலிகளை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்;

சிஹல உறுமயவின் செயலாளரும் முன்னாள் எம். பியுமான திலக் கருணாரட்ண மேற்கண்டவாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்; (8ம் பக்கம் பார்க்க)

# தமிழக அரச வழக்கறிஞர்கள் கூண்டோடு இராஜினாமா!

அ.இ.அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பதவியேற்றதை அடுத்து தமிழ்நாடு அரச வழக்கறிஞர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

செல்வி ஜெயலலிதா வருமானத்துக்கு மிஞ்சிய சொத்து சேர்த்த வழக்கில் ஆஜராகி இருந்த அரச வழக்கறிஞர்களும் இதில் அடங்குவர்

இதேவேளை தமிழ்நாடு தலைமை பொலிஸ் கமிஷனர் காளிமுத்து பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது இடத்திற்கு தமிழ்நாடு மதுவிலக்கு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளர் அலெக்சாண்டர் நியமிக்கப் பட்டுள்ளார். (வ)

# கடத்திச் செல்லப்பட்ட சிங்கள வியாபாரிகள் இருவர் வெட்டிக்கொலை

(மட்டக்களப்பு)

இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட இரு சிங்கள செங்கல் வியாபாரிகள் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு கல்முனை வீதியிலுள்ள மயானமொன்றில் இடம் பெற்றுள்ளது. மயானத்திலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் எஸ். எஸ் மானடுவ (வயது22) விக்கிரமசிங்க (வயது42) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அம்பாறையைச் சேர்ந்த மேற்படி நபர்களின் மரணம் பற்றி பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச பிரதமர் ரட்ணசிறி கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்

கடந்த வியாழக்கிழமை அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்துக்குப் பின்னர் தனிப்பட்ட முறையில் இடம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பிலேயே அவர் அரசின் திட்டத்துக்கான தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்

அண்மையில் தென்மராட்சியில் அக்கினிச்சுவாலை 1 நடவடிக்கையில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பெருந் தோல்விக்குப் பின்னரே அரசாங்கம் யுத்தநிறுத்தமொன்றை கடைப்பிடிக்கும் யோசனையில் இறங்கியுள்ளது.

எனினும் அரசாங்கம் உத்தியோகப் பற்றற்ற முறையில் யுத்தநிறுத்தம் செய்தால் அதைத் தான் எதிர்க்க மாட்டேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அக்கினிச் சுவாலை 1 இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்விக்கும் இழப்புக்கும் படைத் தளபதிகளே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டுமென பிரதமர் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## விடுதலைப் புலிகளுடன் பேசுவதாயின்

# யுத்த நிறுத்தமும் தடை நீக்கமும் அவசியம் எரிக்சோலிடம் சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

நோர்வேயின் சிறப்புப்பிரதிநிதி எரிக்சோல் ஹெய்ம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தனை நேற்று மாலை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

அரசு-விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை விடயத்தில் தற்போதய நிலவரம் தொடர்பாக இச்சந்திப்பின் போது இருவரும் கருத்துப் பரிமாறிக் கொண்டதாக தெரிய வருகின்றது.

அரசும்-விடுதலைப் புலிகளும் விரைவாக பேச்சுவார்த்தைக்கு வரவேண்டியதன் அவசியம் பற்றி இச்சந்திப்பில் வலியுறுத்தியுள்ள சம்பந்தன் யுத்த நிறுத்தம் செய்யப்பட்டே பேச்சு வார்த்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கூ. சங்க கிளை திறப்பு

(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்று திறந்து வை க்கப்பட்டுள்ளது;
இதேவேளை, மணற்காட்டுப் பகுதியில் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்று நிறுவப்படாமையால், அப்பகுதி மக்கள் பல மைல் தூரம் நடந்து சென்று பொருட்களைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.
[உ-43]

# புனரமைப்புப் பணிக்கு 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு

[யாழ்ப்பாணம்]
யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளுவதற்கென 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது;
மேற்படி நிதியை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது:
மேற்படி,
பாடசாலையில் கடந்த பல வருடங்களாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படாததுடன்,
அண்மைக்கால யுத்த அனர்த்தங்களினால் இப்பாட சாலை சேதமுற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.
பாடசாலைப்புனரமைப்புப் பணிகள் விரைந்து முன்னெடுக்கப்படவுள்ளன.
[உ-10]

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம்
## கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
## யாழ்ப்பாணம்

1; கீழ் வரும் வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 7 ஆம் திகதி காலை 10.30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப் படும்.

2; நிர்மாணப் பயிற்சிநிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள்நிர்மாணிப்பதற்கு தரம் எம் - 9 இலும் அதற்கு மேல்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்கள் மட்டும் கேள்விப் ப திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

3; ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4: தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர்; வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று. கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை நிலையம் நிர்மாணித்தல்: | ரூபா 8000/- | ரூபா 500/- |
| 2; வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் மாதிரி அரச விடுதி தரம் 111 (தாதிகளுக்கான) நிர்மாணித்தல். | ரூபா 12000/- | ரூபா 500/- |

05. இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாண அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்; மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்;

பிரதம பொறியியலாளர் அலுவலகம்
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்;
15-05-2001

பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

(C/1994)

# கேள்வி அறிவித்தல்

## அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி,
## யாழ்ப்பாணம்.

1. கோப்பாய் வைத்தியசாலையில் காசநோயாளர் விடுதி அமைத்தல் கட்டம் 1 நிர்மாணிப்பதற்கான கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபைத் தலைவரினால் 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 06 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள அரசாங்க அதிபர் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப் படும்;

2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8 அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவசர்:

3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்,

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. கோப்பாய் வைத்தியசாலையில் காச நோயாளர் விடுதி அமைத்தல் கட்டம் 1 | ரூபா 20,000/- | ரூபா 500/- |

4; கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்: அத்துடன் மேலதிக விபரங்களை கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று பொறியியலாளரிடம் இருந்து வேலை நாட்களில் பிற்பகல் 4.45 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்;

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்;

கச்சேரி,
யாழ்ப்பாணம்;
15-05-2001

(C-1991)

# சுகாதாரத் தொண்டர்க்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]
சுகாதாரத் தொண்டர்கள் அனைவரையும் இன்று காலை 10.00மணிக்கு யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பி தலைமை காரியாலயத்திற்கு சமுகம் தருமாறு யாழ்ப்பாணக்காரியாலயப் பொறுப்பாளர் நீகன் அறிவித்துள்ளார்.
அனைவரையும்குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து ஒத்துழைப்பு வழங்குமாறு மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.
[உ-10]

# பயிற்சி மையம்

(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 100 அபிவிருத்தித் தொண்டர்களிற்கும் பருத்தித்துறை, மணற்காடு விளாங்காடு. குடத்தனைப் பகுதிகளில் பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டு பயிற்சி அளிக்கப்படும் என பருத்தித்துறை ஈ. பி. டி. பி. பொறுப்பாளர் தெரிவித்தார்; (உ-43)

# வாழைப்பழம் விலை வீழ்ச்சி

(வடமராட்சி கிழக்கு)
யாழ்குடாநாட்டில் வாழைப் பழத்தின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.
வீசுகின்ற கடுமையான காற்றினால் வாழை மரங்கள் முறிந்து வீழ்வதால் இவ் விலை வீழ்ச்சிக்குக் காரணமாகும்.
ஆவரங்கால் பகுதியில் ஒரு கிலோ வாழைப்பழம் 5 ரூபாவில் இருந்து 4 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது;
(உ-43)

# சிரமதானம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் உள்ள நரிக்குண்டு விளையாட்டு மைதானமும் ஈச்சமோட்டை விளையாட்டு மைதானமும் யாழ்ப்பாண ஈ.பி.டி.பி அமைப்பினரால் சிரமதானம் செய்யப்பட்டு வருகின்றது:
இவ் விளையாட்டு மைதானங்களில் காணப்பட்ட பெருமளவு புல், பூண்டுகள் அழிக்கப்பட்டு துப்பரவு செய்யப்பட்டுவருகின்றது;
(உ-10)

# வீதிக் கண்காணிப்பு

[வடமராட்சி கிழக்கு]
யாழ். நகரில் போக்குவரத்து நெருக்கடியால் ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் நகரின் மையப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்
(உ-43)

# ராஜபக்ஷவின் இடத்திற்கு வேலம்மாள்

[கொழும்பு]
மேல்மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவராக இருந்த ரட்ணஸ்ரீராஜபக்ஷ பதவியை இழந்ததையடுத்து அவரின் இடத்திற்கு வேலம்மாள் செல்லச்சாமி நியமிக்கப்பட்டுள்ளார்;
மாகாணசபைத் தேர்தலில் சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற்ற திருமதி செல்லச்சாமி மீண்டும் மாகாணசபை அங்கத்தவராகப் பதவி யேற்றுக் கொண்டார்;
(து)

# சுற்றுலா

[வடமராட்சி கிழக்கு]
வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதிக்கு சுற்றுலா செல்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது;
இப்பகுதியில் மணலில் தூர்ந்து போய் மிதந்து வருகின்ற பழமை வாய்ந்த தேவாலயத்தை பெருமளவானோர் பார்வையிட்டு வருகின்றனர்:
[உ-43]

# இராசி பலன்

16 - 5 - 2001
(வைகாசி 2, புதன்)
சதயம் வைகறை 5. 34 வரை
நவமி முழுவதும்
ராகுகாலம் 11. 53- 1: 23
சுபநேரம்- 4.23- 5:53
சித்தாமிர்தம்

**மேடம்**
காரியம் கைகூடும், தன வரவு, கௌரவம், நண்பர்கள் சந்திப்பு;

**இடபம்**
சுபநிகழ்ச்சி, நல்ல செய்தி, பிறர் உதவி, முயற்சி கை கூடும்;

**மிதுனம்**
பிரயாணம், ஆன்றோர் ஆசி, உடல் சோர்வு, புதிய திட்டம்;

**கடகம்**
எதிர்பாராத அச்சம், வீண் பிரச்சினை, காரிய தடங்கல், நல்ல உணவு கிடைத்தல்,

**சிங்கம்**
போசன சுகம், உல்லாசம், காரிய ஜெயம், புதியவர் சந்திப்பு.

**கன்னி**
சத்துரு ஜெயம், தொழில் விருத்தி, நோய் குணமடைதல், காரிய நன்மை.

**துலாம்**
இலட்சுமிகரம், வீண்மனஸ்தாபம், காரிய தாமதம், சிறு வியாதி;

**விருச்சிகம்**
தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், கௌரவக் குறைவு, திடீர் நன்மை;

**தனுசு**
முயற்சி கைகூடும், சகோதரர் உதவி, புதிய பொருள் சேர்க்கை, இனிய சம்பவம்;

**மகரம்**
காரிய தாமதம், விவாதம், மனஸ்தாபம், பொருள் விரயம்;

**கும்பம்**
சயனசுகம், புதிய பொருள் சேர்க்கை, ஆழ்ந்த சிந்தை, முயற்சி கைகூடும்;

**மீனம்**
பிரயாணம், மனஅமைதிக் குறைவு, சுபசெலவு, காரிய தாமதம்,

(பழையநேரப்படிகணிப்பிடப் பட்டது)

வளவன்

# ஆதரவற்ற சிறார்களை அரவணைத்துதவுதல்

# இம்மைக்கும், மறுமைக்கும் பயன் தரவல்லது

மனித வாழ்வியலில் நாம் காணும் காட்சிகள்பல: இயற்கையின் எழிற்கோலத்தையும் செயற்கையின் சிதைந்த கோலத்தையும் இன்று ஒரு சேரப் பார்க்கலாம். இதற்குப்பலகாரணங்கள் சொல்லலாம். ஆனால் இக்காட்சிகளிடையே வயிற்றுப்பசியைத்தீர்க்கக் கையேந்திக் கண்ணில் நீர் வழிய நிற்கும் இளஞ்சிறாரைக் காணும்போது எம்முடைய வாழ்க்கை நடைமுறையை மீள் நோக்குச் செய்ய வேண்டியுள்ளது. இந்தச்சிறாரின் வாழ்க்கைப் பின்புலத்தைப் பற்றிச் சற்று எண்ணிப்பார்க்க எமது உள்ளத்தை ஏவ வேண்டியுள்ளது. 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற பழமொழிக்கமைய எமது சொந்தக் குழந்தைகளின் நலத்திற்காகவே வாழும் பெற்றோராக நாம் மாறிவிட்டோம். 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்று சொல்லி வாழ்ந்த முன்னோரை மறந்து விட்டோம்.

## வளமுடைய கேணிகள் தேவை

காலத்தின் சுழற்சியில்இயற்கையாகவும் செயற்கையாகவும் ஏற்பட்ட சூழல் மாற்றமும் வதிவிடப் பெயர்வும் இளஞ்சிறார் பலரை அரவணைத்து வளர்க்க யாருமற்றவர்களாக்கிவிட்டன. பெற்றோரை இழந்தும் பிரிந்தும் வாழும் சிறார் உணவைத் தேடி அலையும் காட்சி உலகெங்கும் காணலாம். 'சிறாரை மக்கட் செல்வம்' என மதித்துப் போற்றிய எம்மிடையேயும்இந்நிலைகாணப்படுவது மிகவும் வருத்தத்திற்குரியது. ஆனால் 'மனிதம்' இன்னும்மாண்டுவிட வில்லை என்டதைக் காட்ட சிறாரைப் பேணும்'சிறுவர் இல்லங்கள்' சில எம்மவரால் நடத்தப்படுகின்றன. இத்தகைய இல்லங்களில் வந்து அடைக்கலம் புகும் சிட்டுகளை அன்பு காட்டி அரவணைத்து, ஒழுக்கமுடன்வளர்த்துப் பெரியவர்களாக்கும் பணி மிகப் பெரியது. உடல் வளம், மன வளம், கொடை வளம் என்று மூன்று வற்றாத வளமுடைய கேணிகள் இவ் இல்லங்களுக்கு மிகவும் இன்றியமையாதவை. இவற்றைப் பெறுவதற்கும் பகிர்வதற்கும்சிறந்த ஆளுமையும் நேர்மையும் பொறுமையும் பொழுதும் நிறைந்த நிர்வாகம் தேவை.

## இறைபணிக்கொப்பானபணி

இலலங்களிலேவளரும் சிறாரின் இயல்பும் குணநலமும் குன்றி விடாமல் பசியைப் போக்கி ஆடை அணிவித்து ஒழுக்கம்புகட்டி உரிய கல்விப் பேறு அளித்துக் காப்பது என்பது இறைபணி செய்வதை ஒத்தது. இப்பணியிலே ஈடுபடுவோர் முதலில் தம்மைச் சீர் செய்து கொடையுள்ளமும் இறைநம்பிக்கையும் உடையவராய் சிறாருக்குச் சிறந்த முன்மாதிரியாகவும் இயங்க வேண்டும். இல்லம் தனது நிலையில் மட்டும் அன்றித் தன்னைப் பேண வல்ல புறத்தே வாழும் கொடையுள்ளங்களையும் இனங் கண்டு தொடர்பு கொண்டு அவர்களைத் தம்மோடு இணைத்துக் கொள்ள வேண்டும்.

கொடை நல்கும் உள்ளங்கள் உலகெங்கும் பரந்து வாழ்கின்றன. இன்று புலம் பெயர்ந்துமேலை நாடுகளிலே வாழும் தமிழர்கள் கொடை நல்கும் பணியிலே முன்னிற்கின்றனர். தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த பொன்னாட்டின் நினைவுகளைச் சுமந்து வாழும் அவர்களை இக்கொடைப்பணி ஊக்கம் பெற வைக்கும். எனது பிறந்த நாட்டிலே வாழும் திக்கற்ற சிறாருக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைஉருவாக்கும். உழைக்கும் பொருளில் ஒரு சிறு துளியை ஒதுக்கி அனுப்பத் தூண்டும். அச்சிறு துளிகள் ஒன்றிணைந்து சிறு கால்வாயாகச்சிறுவர் இல்லங்களைச் சேரும் போது மனிதப்பிறவியின் பயன் நன்கு உணரப் படும். இந்த நிலையினைத் தெளிவாகக் காணவும் உணரவும் எமக்கு வாய்ப்பளித்தவர் த விவேகானந்தன். திருநெல்வேலியில் கலாசாலையில் அமைந்துள்ள சைவச்சிறார் இல்லப் பிள்ளைகளின் நலம் கருதிகனடாவில் வாழும் சைவத் தமிழர்களை அணுகிக் கொடைப் பணி செய்யுமாறு வேண்டி அவர்களிடம் பொருட் கொடை சேர்த்து ஒவ்வொரு மாதமும் சைவச் சிறார் இல்லத்தை நடத்துகின்ற சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி வருகின்றார். சென்ற ஆண்டு அவர் முயற்சியாலும் கனடா வாழ் [தமிழன்பர்களின் மன முவந்த கொடையினாலும்] 7200 கனடிய டொலர் இவ் வில்லத்திற்குக் கிடைத்தது. இந்தக்கொடை இல்லச் சிறாரின் வருடாந்தத் தேவைகளில் பத்தில் ஒரு பங்கினை நிறைவு செய்தது இது இறைவன் கருணைஎம் சிறார்பால் இருப்பதை உணர்த்தியது.

## நேசக்கரங்களை நினைவு கூருவர்

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் கொடை எம் சிறாரைப் பேணும் பணிக்கு ஒரு விடிவெள்ளியாக பிளங்குகிறது. எமது சூழலில் எம்மோடுஒன்றாய்க்கூடிவாழ்ந்த தமிழர் எம்மை நினைந்து தான் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் கொடை எம்மில்லச் சிறாரை உடல் வளம் உள்ளவரார்க, மனவளம் உள்ளவராக் வளர உதவுகிறது சிறாரின்உணவு, உடை, கல்வி மருத்துவம் போன்றவற்றை இதனால் நிறைவு செய்ய முடிகிறது இப்பணியின் சிறப்பைச்சிறார் இப்போது உணரும் நிலையில் இல்லை ஆனால் அவர்கள் வளர்ந்து சமூகத்திலே ஒரு பிரதிநிதியாக வாழும் போது அதை உணருவர். தமது வாழ்வின் உயர்ச்சிக்காக உதவிய நேசக் கரங்களை நினைவு கூருவர். எதிர்காலத்துச் சிறாருக்காகத் தாமும் உதவ வேண்டும என்ற உயரிய பணியைச் செய்ய வேண்டுமென உறுதி பூணுவர். அதற்கான முன்னோடிப் பயிற்சியையும் ஊக்கத்தையும் த விவேகானந்தன் மூலம் கனடாவில் வாழும் தமிழர்கள் தருகிறார்கள். எதிர்பார்ப்பு எதுவுமின்றிச் செய்யப்படும் ஈகைதான் ஈடு இணையற்றது எமது மனித வாழ்வின் மேம்பாட்டை உணர்த்தும் கொடை இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தர வல்லது. அதை நல்கும் அனைத்து உள்ளங்களும் என்றும் எல்லோராலும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்

கலாநிதி
**மனோன்மணி சண்முகதாஸ்**
இல்லத்திட்டப் பணிப்பாளர்
சைவச் சிறுவர் இல்லம்
திருநெல்வேலி

## இலக்கிய விழா

[கொழும்பு]

ஆகஸ்ட் இருபத்தி நான்கு முதல் இருபத்தியாறு வரை தமிழ் இலக்கிய விழா நடைபெறவிருக்கிறது

திருகோணமலையில் இம் பெறவிருக்கும் இவ் விழாவில் புத்தகக் கண்காட்சி ஓவியக் கண் காட்சி, ஆய்வரங்கு என்பன இடம்பெறவிருக்கின்றன.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு–கிழக்கு கல்வி அமைச்சு செய்து வருகின்றது [து]

## விபத்தில் காயம்

[மந்திகை]

நவிண்டில் பகுதியில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் நவற்கிரியைச் சேர்ந்த ப. கனகசபாபதி (வயது 52) என்பவரே காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-23,

## கருவாட்டு உற்பத்தி அதிகரிப்பு

(வடமராடசி கிழககு

வடமராட்சி கிழக்கு குடத்தனை மணற்காட்டுப் பகுதிகளில் கருவாடு உற்பத்தியின் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் கருவாடு கொள்வனவு செய்யப் பெருமளவு வியாபாரிகள் இப் பகுதிக்குப் படை எடுக்கின்றமையை காண முடிகிறது [உ-43]

## சிரமதானம்

(வடமராடசி கிழக்கு)

வடமராட்சிப் பகுதியில் அபிவிருத்தித் தொண்டர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள் திங்கட் கிழமை பருத்தித்துறை பேருந்து நிலையத்திற்கு அருகில் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர், (உ-43)

# இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலே பொருளாதார விருத்திஏற்படும்

### மத்தியவங்கி அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் மாத்திரமே ஆக்க பூர்வமான பொருளாதார வளர்ச்சி காணமுடியும்.

இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் தொடரும் யுத்த அனர்த்தம் நிறுத்தப்பட்டு சமாதான நிலைமை ஒன்று ஏற்பட்டால் மட்டுமே அந்நிய நாட்டு முதலீடுகள் கிடைக்க வழிஏற்படும்,

சொந்த அரசியல் இலாபங்கள், குரோதங்கள் போன்றவற்றைக் கைவிட்டு இனப் பிரச்சினைத் தீர்விற்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டில்அமைதியும், ஒழுங்கும் சீராக இருந்தால் மட்டுமே சர்வதேசநிதிநிறுவனங்களின் உதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டாகும்.

நாட்டின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தநாட்டு மக்கள் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும். க-05

# அங்கம் வகிக்கும் அரசுக்கு முதுகில்குத்தும்மனிதனல்ல

### அமைச்சர் தன்நிலை விளக்கம்

(கொழும்பு)

அங்கம் வகிககும் அரசுக்கு முதுகில் குத்தும் மனிதனல்ல தான் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தனது நிலைப்பாடு குறித்து விளக்கமளித்துளளார்.

ஐதேக. யூன் மாதம் நபபிக்கையில லாப் பிரேரணை கொண்டுவர இருக்கிறது அதன் போது முஸ்லிம் காங்கிரஸின் நிலை எவ்வாறு இருக்கும என்ற கேளவிக்கு பதிலளிக்கையில அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுகிறது என்று தெரிந்திருந்தும் இந்த அரசின் அங்கம் வகிப்பதா இல்லையா என்ற முடிவை எடுக்க முடியாத நிலையில் பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறேன்.

எனது கருத்தை தெரிவிக்கும் உரிமை எனக்கு உண்டு. நான் அமைச்சரவையில ஒரு அடிமையாக இருக்க முடியாது.

என் கருத்துக்கு எதிர்ப்பு இருக்குமானால் ''மிக்க நனறி அப்படியிருக்க என்னால முடியாது'' என்றுகூறி வெளியேறி விடுவேன்

விடயங்கள் மோசமடையுமானால தான் அரசிலிருந்து வெளியேறக கூடும எவ்வாறாயினும் கட்சியே அதனை முடிவு செய்யும் எனறும் தெரிவித்துளளார். (உ)

# வடமராட்சி கிழக்கு கடலில் மீன்பிடிக்கும் நேரம் அதிகரிப்பு

### குறைகேள் நிகழ்வில் படையினர் அனுமதி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் கடற்றொழில் புரியும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம்அதிகாலை 4.00 மணியளவில் இருந்து பி.ப. 3.00 மணிவரை இப் பகுதிக் கடலில் மீன் பிடிக்க அங்கு நிலை கொண்டிருக்கும் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அண்மையில் இப்பகுதி மக்களை ஒன்றிணைந்து அங்கு நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் தமது முகாம் பகுதிக்கு அழைத்துகுறைகேள் நிகழ்வு ஒன்றினை நடாத்தினர்;

அவ் வேளை, மீன்பிடிக்கும் நேரத்தை அதிகரித்தல், பேருந்து சேவைநடாத்துதல், கூட்டுறவுச் சங்கத்தினை நிறுவுதல் குறித்து மக்கள் தமது அபிப்பிராயங்களைவெளியிட்டபோது,

மீன் பிடிப்பது தொடர்பாக மேற்படி அறிவித்தல் விடுவிக்கப்பட்டதுடன்,

மற்றைய விடயங்கள் தொடர்பாகஉரியவர்களுடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுப்பது எனவும் படைத்தரப்பில் உறுதி கூறப்பட்டது.

இதேவேளை, வடமராட்சிப் பகுதியின் ஏனைய இடங்களில் காலை 6.00 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-48)

## போஷாக்கு நிலையம்

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் சிறுவர் போஷாக்கு நிலையம் ஒன்றை அமைக்குமாறு இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்பகுதியில் உள்ள குழந்தைகள் வறுமை காரணமாக போஷாக் கற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-43)

# கொழும்புத்துறையில் மக்களை மீளக்குடியமர்த்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி தலைமை அலுவலகத்தில் அலுவலகப் பொறுப்பாளர் றீகன் தலைமையில் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட பகுதி கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மீளக் குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல்களின் பின். இது விடயம பற்றி இராணுவ உயாமட்டக் குழுவினரிடம் கலந்தாலோசித்து கூடிய விரைவில் முடிவு எடுக்கப்படும் என ஈ பி டி பி அமைப்பு தரப்பினால் உறுதி கூறப்பட்டதுடன்,

மீளக்குடியமர வேண்டிய பகுதிகளை கிராம அலுவலர்கள மற்றும். ஈ பி டி பியினர் இராணுவத்தினரின் உதவியுடன சென்று பார்வையிட்டனர். (உ-10)

# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 17

### ஆக்கம்: செல்வி

★ **பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லைத் தருக.**

01) வாரணம் ————————
02) வதனம் ————————
03) நயனம் ——————————
04) இந்திரவில் ——————————
05) நாகணவாய் ——————————

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.**

06) தென்னை, பனை முதலியவற்றின் இளங்காயை எவ்வாறழைப்பர்?
07) கழுதையின் மலம் எவ்வாறழைக்கப்படும்?
08) கற்றாழையின் உள்ளீட்டை எவ்வாறழைப்பர்?
09) புலி, சிங்கம், நாய் என்பனவற்றின் இளமைப் பெயர் யாது?
10) ஆடு, மாடுகளின் தொகுதி எவ்வாறழைக்கப்படும்?

★ **பின்வரும் வாக்கியங்களை அடைப்புக்குள்ளிருக்கும் சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து கீறுவதன் மூலம் பூர்த்தியாக்குக.**

11) வெகு விரைவில் நம் நாடு உணவு (உர்ப்பத்தி, உற்பத்தி, உட்பத்தி) யில் தன்னிறைவு பெறுமெனச் செய்திகள் கூறுகின்றன.
12) இயற்கைக் (காற்சி, காச்சி, காட்சி) களைக் காண்பதனால் மனம் அமைதி பெறுகின்றது.
13) கைத்தறிப் (பிடவை, புடைவை, புடவை) அணிவது இன்று அருகிவிட்டது.
14) சகுனியின் (சூழ்ச்சி, சூற்சி, சூட்சி) யினால் தருமர் சூதில் தோற்றார்.
15) இலங்கையை (ஆன்றவன், ஆண்டவன், ஆன்டவன்) இராவணன்.

★ **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப் பதத்தை தருக?**

16) Wood-Cutter ————————
17) Magnet ——————————
18) Copper ——————————
19) Pentagon ——————————
20) Raisin ——————————

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.**

21) உலகில் மிகச்சிறிய தேசிய கீதத்தினை உடைய நாடு எது?
22) வடக்குத் திசையிலிருந்து வீசும் காற்றை எவ்வாறு அழைப்பர்?
23) எந்த விலங்கிலிருந்து கஸ்தூரி பெறப்படுகிறது?
24) எந்தவிதமான ஒலியையும் எழுப்ப முடியாத விலங்கு எது?
25) இலங்கையில் வரலாற்றுப் புகழ்மிக்க ஓவியங்கள் அமைந்துள்ள இடம் எது?

★ **பின்வரும் பழமொழிகள் தரும் கருத்தை விளக்குக?**

26) பாம்புக்கு பால்வார்த்தது போல
27) நீர்மேல் எழுத்துப் போல
28) முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல
29) வேலியே பயிரை மேய்ந்தாற் போல
30) வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தது போல

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக**

31) புத்தபெருமானின் இளமைப் பருவத்து பெயர் யாது?
32) மணிமேகலை எனும் காப்பியத்தின் கதாநாயகி மணிமேகலை யாருடைய மகள்?
33) பஞ்சபாண்டவர்களுடைய தாயின் பெயர் என்ன?
34) சிவனுக்கு இறைச்சியை நைவேத்தியமாகப் படைத்து முக்தியடைந்த நாயனார் யார்?
35) இறைவனே 'அம்மையே' என அழைத்த பெருமைக்குரிய நாயனார் யார்?

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.**

பிறந்த நாள் விழா ஒன்றிற்கு ஐம்பது பேர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு அழைக்கப்பட்டிருந்தவர்களுக்கு வடை, பிஸ்கட், கேக், கூல்ரிங்ஸ் என்பன பரிமாறப்பட்டன.
வடையை மாத்திரம் விரும்பியவர்கள் பத்துப்பேர்; வடை, பிஸ்கட், கேக் ஆகிய மூன்றையும் விரும்பியவர்கள் பத்துப் பேர். மூன்று பேர் வடையையும் பிஸ்கட்டையும் விரும்பினர். ஐந்துபேர் வடையையும் கேக்கையும் விரும்பினர். பிஸ்கட்டையும் கேக்கையும் நான்கு பேர் விரும்பினர். நான்குபேர் கூல்ரிங்ஸை மாத்திரம் விரும்பினர்.

36) வடை, கேக் ஆகிய இரண்டையும் மாத்திரம் விரும்பியவர்கள் எத்தனை பேர்?
37) பிஸ்கட்டையும் வடையையும், பிஸ்கட்டையும் கேக்கையும் விரும்பியவர்கள் எத்தனை பேர்?
38) வடை, பிஸ்கட், கேக் ஆகிய மூன்றினையும் விரும்பியவர்கள் எத்தனை பேர்?
39) கூல்ரிங்ஸையும், ஏனைய தின்பண்டங்களையும் விரும்பியவர்கள் எத்தனை பேர்?
40) கேக்கை மாத்திரம் விரும்பியவர்கள் எத்தனை பேர்?

# புலமைப் பரிசில் பரீட்சை வினா இல-16

**அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

1) க. பிரவீணா, கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம்
2) தி. தனம் ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
3) ப. தாமரா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
4) ச. கார்த்திகா, வட்டு. மத்திய கல்லூரி
5) கு. ஜெசாமினி, தாவடி இ. த. க. பாடசாலை
6) சி. கடோற்கஜன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
7) நி. பிரசாந், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
8) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
9) க. சோபிகா, அல்லாரை மகாவித்தியாலயம்
10) க. நிரோஜினி, யாழ். புனிதமரியாள் வித்தியாலயம்
11) இ. பிரதிகா, சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
12) அ. சிவறஞ்சன், தாவடி இ. த. க. பாடசாலை
13) ச. சாகீர்த்தன், தாவடி இ. த. க. பாடசாலை
14) ம. லவண்ராஜ், புற்றளை மகாவித்தியாலயம்
15) இ. டில்றுக்ஷன், தாவடி இ. த. க. பாடசாலை
16) ஞா. ரகுவர்மன், வல்லை மகளிர் மகாவித்தியாலயம்
17) வா. பிரணவன் வல்லை. அ.மி.த.க. பாடசாலை
18) இ. ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீகணேசன் வித்தியாலயம்
19) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.
20) சி. நிருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
21) ப. சஜிந்தன், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்
22) வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
23) ஜெ. சந்துருகேஷன், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
24) அ. விஷ்ணுராஜா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
25) இ. பாமா, துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
26) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
27) ப. திலக்ஸனா, அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை
28) ஜெ. ஜெனித்தா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
29) அ. வஜீரன், யாழ். பரியோவான் கல்லூரி
30) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
31) சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
32) சி. சிறிரஞ்சன், துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
33) அ. நிருபன், துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
34) லூ. அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
35) சி. கஜாகரன், கொக்குவில் சி. சி. த. க. பாடசாலை
36) ஸ்ரீ. சுதர்சிகா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
37) ஆ. திவ்வியா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
38) ச. நிரோசனா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
39) வி. ஜெயதீபா, நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்
40) சி. கஜந்தினி, சாவ. இந்து ஆரம்ப பாடசாலை
41) க. மயூரன், வல்லை. மகளிர் மகாவித்தியாலயம்
42) கி. சுஜாதா, தேவரையாழி இந்துக் கல்லூரி
43) பா. கௌசிகா, தாவடி இ.த.க. பாடசாலை
44) அ. வசிகரன், அல்வாய் றோ. க. த. க. பாடசாலை
45) ச. சபேசன், சாவ. இந்து ஆரம்ப பாடசாலை
46) ம. ஐங்கரன், சாவ. இந்து ஆரம்ப பாடசாலை
47) த. டயானி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
48) ம. அனோஜினி, தாவடி இ. த. க. பாடசாலை
49) கு. மேரிஜசிந்தா, யாழ். திருக் குடும்ப கன்னியர்மடம்
50) தெ. கஜமஞ்சிதன், புற்றளை மகாவித்தியாலயம்
51) யோ. செபஸ்ரியன், அளவெட்டி றோ. க. த. க. பாடசாலை
52) ம. மேரிறெபிக்கா, யாழ். திருக் குடும்ப கன்னியர் மடம்
53) மோ. துவாரகன் யா-அராலி சரஸ்வதி ம.வி

**குறிப்பு :-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 21-5 2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**கல்விப் பகுதி**
**வினா இல- 17**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..................
சொந்த முகவரி: ..................
கற்கும் பாடசாலை : ..................
மாணவர் கையொப்பம் : ..................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை வினா இல- 16 விடைகள்

01) வயிறு
02) தலை
03) தலைமுடி
04) கிளி
05) முகில்
06) மரநாய்
07) கடற்றொழில்
08) இரவும் பகலும்
09) செவ்வானம்
10) கருமுகில்
11) மனமின்றிச் செய்தல்
12) வெல்ல முயலுதல்
13) மேனி மெலிதல்
14) பிடிவாதம்
15) ஆதரவின்றி இருத்தல்
16) ரோஜா மொட்டு
17) நரி
18) சுதந்திர தினம்
19) வழமையாக
20) விண்ணப்பதாரி
21) கல்லடி சு. வேலுப்பிள்ளை
22) வேலணை புங்குடுதீவுப் பாலம்
23) தலவாக்கொல
24) லூஜிபிறெய்லி
25) பூபாளம்
26) வன்னி நாட்டரசன்
27) பண்டாரிக்குளத்தில் அமைந்திருந்தது
28) இராச்சியம்
29) தமிழ் இனத்தைச்சேர்ந்தவன்
30) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியிலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்முற்பகுதியிலும்ஆட்சிசெய்தான்.
31) காரைக்காலம்மையார்
32) திருநாவுக்கரசு நாயனார்
33) நம்பியாண்டார்நம்பி
34) பௌத்த மதத்தினர்
35) இயேசு கிறிஸ்து
36] எட்டு பூங்கொத்துக்கள்
37] பதினாறு நீலப்பூக்கள்
38] இருபத்தி நான்கு மஞ்சள் பூக்கள்
39] எட்டு இலைகள்
40] எண்பது பூக்கள்

## இன்று நேர்முகப் பரீட்சை

வலிகாமவலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இன்று வரை கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9.00 மணிக்கு வலிகாம வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் அதற்கமைய சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உரிய ஆவணங்களுடன் (தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், க. பொ. த. (சா/த) க. பொ. த. (உ/த) பெறுபேற்றுச் சான்றிதழ், நிழற்பட மூலப் பிரதிகளுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (உ)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி அமைக்குக

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி கிழக்கு விளாங்காட்டுப் பகுதியில் ஆயுர் வேத வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முன்னர் வடமராட்சி கிழக்கு மாமுனை, குடத்தனைப் பகுதிகளில் இவ் ஆயுர்வேத வைத்தியசாலை இயங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. [உ-43]

## கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்தியசாலையை வடமராட்சி கிழக்குப் பகுதியில் இயக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-43)

## இன்று ஒரு தகவல்

## நல்ல மனைவி எப்படி?

கணவனிடமிருந்து அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் பெண்கள் வாழ்க்கையில் பெரும் பாலும் தோல்விகளையே கண்டு வருகிறார்கள். சில வேளைகளில் அன்பைச் செலுத்தும் அதே கணவன், சில வேளைகளில் எரிந்து விழுவான், சீறுவான்! தொழிலிலும் மற்றவர்களிடத்திலும் ஏற்படும் ஏமாற்றத்தினால் கணவன் தன்னுடைய கோபத்தை மனைவியிடம்காட்டுகிறான். மனைவி இதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கணவன் சொல்லுவதை மனைவி மிக அக்கறையுடன் கேட்கவேண்டும். கணவனுக்குப் பிடித்த எல்லோரிடமும் மனைவியும் சிரித்துப் பேசிப் பழக வேண்டும்:

எப்போதும் அழகாக உடை உடுத்துவதைக் கணவன் விரும்புகிறான் என்றால் மனைவி எப்போதும் நல்ல சேலைகட்டி நாகரிகத்தோடு இருக்க வேண்டும்: கணவனுக்கு ஆபீஸிலோ தொழிற்சாலையிலோ வேலை அதிகம் என்று தெரிந்தால் வீட்டில் எப்போதும் அமைதி நிலவும்படி மனைவி பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் செய்தால் ஒரு மனைவி தன் வாழ்க்கையில் ஒரு வெற்றிகரமான மனைவியாக இருக்கலாம்:

நன்றி
கல்கண்டு 5-1-1967

## பெண் குழந்தைக்கு தங்க மோதிரம்

(யாழ்ப்பாணம்)
அளவெட்டி அரசினர் மருத்துவமனையின் புதிய மகப்பேற்று விடுதியில் முதலாவதாக பிறந்த குழந்தைக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினரால் தங்க மோதிரம் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 13 ஆம்திகதி புதிதாக திறந்து வைக்கப்பட்ட மேற்படி வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் முதன்முதலாக அளவெட்டி தும்பளையைச்சேர்ந்த புஸ்பமாலா என்ற பெண்மணி பெற்றெடுத்த பெண்குழந்தைக்கே இவ் அன்பளிப்பு வழங்கப்படவுள்ளது. (உ 7)

## வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் கையில் காயம்

(ஏழாலை)
சுன்னாகப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கையில் காயமடைந்துள்ளார்.

சுன்னாகம் பகுதி இளைஞர் ஒருவருக்கும், உரும்பிராயைச்சேர்ந்த இளைஞருக்கும் இடையே இடம்பெற்ற கைகலப்பில், நண்பனுக்காக உதவி புரியச்சென்ற மல்லாகம் பகுதி இளைஞனே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார். (உ-12)

## நம்பிக்கையில்லா பிரேரணை கூட்டணி - ஐ.தே. க விரிவாக பேச்சு

(கொழும்பு)
அரசு மீது கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குஆதரவுவழங்குமாறு, ஐக்கியதேசியக்கட்சி தமிழர் வடுதலைக் கூட்டணியை கடந்த ஞாயிறு சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது,

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப பேச்சுக்கள் நெருங்கிவரும் இத்தருணத்தில் அரசு மீது கொண்டு வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக பரிசிலிக்க வேண்டியுள்ளது.

ஏனெனில் சமாதானப்பேச்சுக்களுக்கு விடுதலைப்புலிகள் இதுவரை எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. நோர்வே தூதுவர் கூட-பேச்சுக்களைமுறித்து விட்டதாகத் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்படும்போது அது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என கூட்டணி எம்பிக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி தொடாந்தும் கூட்டணியை சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

## குருநகர் மாணவர்கள் போஷாக்கின்மையால் உடல் நலம் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]
குருநகர்ப் பகுதி பாடசாலை மாணவர்கள் உயிர்ச்சத்துக் குறைபாட்டினால் மிகவும் பாதிப்புற்றுள்ளதுடன் அவர்களது சுகாதார நிலை மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நடராசா ஸ்ரீ கஜேந்திரன் யா/மாநகரசபைக்கு உட்பட்ட 41 பாடசாலைகளிடையே நடாத்திய ஆய்வுகளின் மூலம் இத்தகவல் தெரிய வந்துள்ளது.

ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்ட மாணவர்களில் அனேக மானவர்கள் குருதிச்சோகை மற்றும், பற்சூத்தை நோய்களின் தாக்கத்திற்குட்பட்டிருப்பதாகவும்,

குறிப்பாக குருநகர் மாணவர்கள் வறுமை, மற்றும் மீன் உணவுகளை உட்கொள்ளாமை காரணமாக கண் பார்வைக் குறைவு கடைவாய் அவிதல், குருதிச்சோகை நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (உ)

## பாதுகாவலன் ஆசிரியருக்கு தேசிய விருது

(யாழ்ப்பாணம்)
பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளைக்கு ''திறமையான வடிவமைப்புக் கொண்ட பத்திரிகைக்கான'' தேசியவிருது வழங்கப்படவுள்ளது. (உ-9)

## யாழில் குருகுலப் பாடசாலை இந்திய ஆசிரியர்கள் கல்விபோதனை

(யாழ்ப்பாணம்)
சிவாச்சாரியார்கள் சமூகத்தைச் சேர்ந்த இளம் சந்ததியினர் குருகுலக் கல்வியைத் தொடர ஏதுவாக குருகுலப் பாடசாலை ஒன்றுஅமைக்கப் படவுள்ளது:

சர்வதேசஇந்துமத குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்தசிவாச்சாரியார்கள் குழு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து பேசி இதற்கான இணக்கப்பாட்டைப் பெற்றுள்ளனர்,

மேற்படி பாடசாலை நல்லூரில் ஜமுனா ஏரிகேணியை அண்டியுள்ள காணி ஒன்றில் ..னைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டு

இந்தியாவில் இருந்துசிறந்த ஆசிரியர்களை அழைத்துஇங்கு கல்விப் போதனையில் ஈடுபடுத்துவதெனவும் சந்திப்பின் போது அமைச்சர் தரப்பில் உறுதி வழங்கப்பட்டது [உ]

## தடுப்புமுகாம் விஜயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை தடுப்பு முகாமிற்கு விஜயம் செய்து அங்குள்ளகைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் வழங்கப்படும் உணவு மற்றும் கடிதம் போன்றவைகளையும் அவர் எடுத்துச் சென்று ஒப்படைப்பார். (உ-10)

## தமிழ் மொழி தினப் போட்டி

(மந்திகை)
தென்மராட்சி கல்வி வலயத்தில் பாடசாலை மட்டத்திலான தமிழ்மொழித் தினப் போட்டிகளை நடாத்தி இம் மாதம் முடிவடைவதற்கிடையில் விண்ணப்பங்களை தென்மராட்சி கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக் பட்டுள்ளது. [உ-39]

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(மந்துவில்)
வைத்தியசாலைக்குச் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்ற சம்பவம் அண்மையில் துன்னாலை கோயில் கடவைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது,

பகல் வேளையில் மேற்படி பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுக்கத் திருடன் ஒருவன் முயன்ற போதிலும், பெண்ணின் கூச்சலைக் கேட்டு அயலவர் ஓடிவரவே கள்வன் முயற்சியைக் கைவிட்டு ஓட்டம் பிடித்தாகக் கூறப்படுகிறது. (உ-39)

## வீதி திருத்தப்படும்

(வடமராட்சி-கிழக்கு)
வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதி வீதி விரைவில் திருத்தப்படவுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன தெரிவித்துள்ளார்.

இந்த வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமையால இவ் வீதியால் போக்குவரததில் ஈடுபடும் மக்கள பெரும துன்பங்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. [உ-43]

## இளைஞன் கைது

(வவுனியா)
வன்னியிலிருந்து வவுனியாவிற்கு சென்ற இளைஞர் ஒருவர் புலனாய்வுப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்.அசோக்குமார் (வயது 28) என்ற இளைஞரே கைது செய்யப்பட்டு தற்பொழுது வவுனியா பிறவுண் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (உ-5)

## அபி. தொண்டர்களால் வடமராட்சிப் பகுதியில் சிரமதானப் பணிகள்

(மந்திகை)
வடமராட்சி பிரதேசத்தில் அபிவிருத்தித் தொண்டர்களினால் சூழல்மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு,மேற்கு, மருதங்கேணி, ஆகியபிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி தொண்டர்கள் இச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை, ஆச்சிரமம், மாலுசந்திப் பிள்ளையார் ஆலயம் போன்ற பொது இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பிரதேசங்களில் அமைந்துள்ள வேறு ஆலயங்கள் பொது இடங்கள், இடம் பெயர்ந்த முகாமகள் போன்ற பல்வேறு பகுதிகளிலும் இப்பணி மேற்கொள்ளப் படுமென பிரதேச செயலக இணைப்பாளர்கள் தெரிவித் தனர்.

அதே வேளை இப்பணி வியாழன்வரைதொடருமென தெரிவிக்கப்படுகிறது (உ-23)

## அமைச்சின் நிதிஉதவியுடன் பஸ் நிலையம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பஸ் நிலையம் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகார அமைச்சின் நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப் படவுள்ளது.

பொது அமைப்புகள் சில யாழ்ப்பாண பஸ் நிலையம் தற்போது வசதியீனங்களுடன் இருப்பதாகவும் பொதுவாக மழை காலங்களின்போது வெள்ளக்காடாக பஸ் நிலையம் காட்சி தருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளதையடுத்து பஸ்நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [உ]

## மக்கள் குறை நிவர்த்தி சேவை மத்திய கல்லூரியில்

[யாழ்ப்பாணம்]
எதிர் வரும் 19, 20 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ள மக்கள் குறை நிவர்த்திச் சேவையில் கலந்து, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகார அமைச்சு பொது மக்களுக்கு அறிவித் துள்ளது.

இச் சேவையின் போது மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மத்திய மாகாண அரசுகளின் கீழ் பணி புரியும் அதிகாரிகள் பலரும் வருகை தரவுள்ளமையும்,

இதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ் அரச செயலகம மேற் கொண்டு வருவதும் குறிபபிடத்தக்கது, இதேவேளை,

இதில்பங்கேற்கும் மக்களை தெளிவாகவும சுருக்கமாகவும் தங்கள பிரச்சினைகளை எழுத்து வடிவில், உரிய ஆவணப் பிரதிகளுடன் இணைத்து எடுத்து வரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். [உ]

## வடமராட்சி கிழக்கில் விறகு வெட்டத் தடை

[வடமராட்சி கிழக்கு]
வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் விறகு வெட்டத் தடை விதிக்கபபட்டுள்ளது.

இப்பகுதி பொது அமைப்புகளும் மதகுருமாரும இணைந்து இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுளளனர்.

முன்னர் இப்பகுதியில் விறகிற்காக பெருமளவு சவுக்கு மரங்கள் அழிக்ப் பட்டமையும இங்கு குறிப் பிடத்தக்கது.

விறகு வெட்ட விதிக்கப் பட்டிருக்கும் தடைககுப் படையினரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கது: (உ-43)

## மருதங்கேணி பிரதேச செயலகத்தை வடமராட்சி கிழக்கில் இயக்குவதற்கு முயற்சி

(வடமராட்சி கிழக்கு)
மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையை வடமராட்சி கிழக்கில் இயங்க நடவடிக்கை எடுக்க பருத்தித் துறை பிரதேச சபையை வலியுறுத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுளளது

குடத்தனை தென் இந்திய திருச்சபையில் வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தி தொடர் பாகபட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தால் நடததபபட்ட கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது

ப. தயானந்தன் தலைமையில் இடம்பெற்றஇக் கூட்டத்தில்,

வடமராட்சிகிழக்கில் பணம் ஏற்றுவதைக் கட்டுப்படுத்துமாறு சமபந்தப்பட்டவர்களைக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது

(உ-43)

# வறிய நாடுகளின் பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்பு வேண்டும்

## ஐ. நா. செயலர் வேண்டுகோள்

(பிறேசிலியா)

அபிவிருத்தி குன்றிய நாடுகளின் பொருட்களுக்கு உலக சந்தையில் அதிக சந்தை வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும் என்று கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அபிவிருத்தி குன்றிய நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் ஐ நா. பொதுச் செயலர் இவ்வாறு குறிப்பிட்டார்:

மேலும் அந்நாடுகளில் தொற்று நோய்கள், பாலியல் நோய்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாகவும்,

இதற்கான பரிகார நடவடிக்கையாகவே வறிய நாடுகளின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி, பொருளாதார ரீதியில் அவற்றை மேம்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (து)

# அமெரிக்க அதிபர் புஷ் இந்தியா வருவார்?

(புதுடில்லி)

அமெரிக்க ஜனாதிபதி ஜேர்ஜ் புஷ் பெரும்பாலும் இந்த ஆண்டு இந்தியா வருவார் என்று, அண்மையில் இந்தியா வந்திருந்த அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ரிச்சர்டு ஆர்மிடேஜ் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, அமெரிக்க அதிபரை இந்தியா வருமாறு பிரதமர் வாஜ்பாய் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே.

பிரதமரின் கடிதத்தினை பரிசீலித்த அமெரிக்க அதிபர் தான் விரைவில் இந்தியா வரவுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சருடாக செய்தி அனுப்பியுள்ளதாக மேலும் தெரிவிவிக்கப் படுகிறது. [உ-9]

# ஆளுநர் செயல் குறித்து எதுவும் கூறுவதற்கில்லை

(சென்னை)

தமிழக ஆளுநர், வேண்டுகோளுக்கிணங்க செல்வி ஜெயலலிதா முதல்வர் பதவி ஏற்றமை குறித்து எதுவும் சொல்வதற்கில்லை என பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனாக் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார்.

தங்கள் கட்சி தோல்வி அடைந்த மாநிலங்களில் யாது செய்யப் போகிறது என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு இந்த மாநிலங்களில் மக்களின் தீர்ப்பை ஏற்போம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பொறுப்புள்ள எதிர்க் கட்சியாக நடப்போம்.

இதே வேளை, பிற மாநிலங்களில் தேர்தல் வர இருக்கிறது. அதில் கவனம் செலுத்துவோம் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனாக் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார். (து)

# ஆஸி. இராணுவத்தில் பெண்களுக்கு முழு உரிமை

(கான்பரா)

முழு அளவில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவுஸ்திரேலியப் பெண்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந் நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது:

இராணுவத்தில் இடம் பெற்றுள்ள அவுஸ்திரேலியப் பெண்கள் இனி முன்னணி இராணுவ நிலைகளிலும் முழு அளவு இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம்:

யுத்த விமானங்கள், நீர் மூழ்கிகள், யுத்தக் கப்பல்கள் ஆகிய வற்றிலும் ஏற்கனவே அவுஸ்திரேலியப் பெண்கள் கடமையாற்றி வந்த போதிலும் காலால் படை, பீரங்கிப்படை, கவச வாகன யுத்தம் ஆகிய வற்றில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# கண்டித்த ஆசிரியர்களை தண்டித்த மாணவர்கள்

[டாக்கா]

பங்களா தேஷில் அண்மையில் நடைபெற்ற பொதுப் பரீட்சை ஒன்றில் 'கொப்பி' அடிக்க முயன்ற கல்லூரி மாணவர்களின் முயற்சியை தடுக்க முயன்ற ஆசிரியர்கள் அம் மாணவர்களாலேயே தாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவர்களை ஆசிரியர்கள் கண்டித்து அவர்களை பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியே அனுப்ப முயன்ற வேளை மாணவர்கள் கூட்டமாக சேர்ந்து ஜன்னல்களை உடைத்தும் கட்டடங்களை இடித்தும் ஆசிரியர்களை தாக்கியும் உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்படி குழப்ப நடவடிக்கையில் 100 க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-9]

## செய்திப்பரல்

★ இரண்டு கோடி 10 இலட்சம் குழந்தைகளுக்கு பங்களாதேஷில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

★ கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோ மலேசியாவில் தனது 3 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

★ காலஞ் சென்ற ஆர். கே நாராயணனின் 34 நாவல்கள் இந்திய, வெளிநாட்டு மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்படவுள்ளன.

★ சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் மலேசிய நிதி அமைச்சர் அன்வரின் மீதுள்ள ஊழல், தன்னினச் சேர்க்கை ஆகிய குற்றச் சாட்டுக்கள் கைவிடப்பட்டன. (உ-9)

## உலக தரிசனம்

### அறுவரை விலக்க எழுவர் விலகினர்

மணிப்பூர் அமைச்சரவையிலிருந்து ஆறு அமைச்சர்களை வெளியேற்றியுள்ளார் முதலமைச்சர்.

தீவிரவாதிகளுடன் தொடர்புடைய காரணத்தால் முதல்வர் வெளியேற்றினார். இதனையடுத்து மேலும் ஏழு அமைச்சர்கள் தாமாகவே அமைச்சரவையிலிருந்து விலகிவிட்டனர். து

# அ.தி.மு.கவின் வெற்றிக்கு காரணம் அனுதாப அலை என்கிறார் கலைஞர்

[சென்னை]

ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டாலும் சிறை சென்று மீண்டவர் என்ற காரணத்தினாலும் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதனால் தோன்றிய அனுதாப அலையே ஜெயலலிதா வெற்றி பெறக் காரணம் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்:

அத்துடன் தேர்தலில் போட்டியிடாமல் தடுத்தது நான் எனக்கூறி பொய்ப்பிரசாரம் மேற்கொண்டமையும் மக்கள் அ.இ.அ.தி.மு.கவை ஆதரிக்கவும் தி.மு.க மீது வெறுப்பு ஏற்படவும் காரணமாக அமைந்து விட்டது என மேலும் கலைஞர் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்:

ஜெயலலிதாவின் மேற்படி கபட நாடகத்தை தமிழக மக்களால் கண்டு கொள்ள முடியாமல் போனதையிட்டு கவலைப்படுகிறேன்.

இனி ஜெயலலிதாவின் ஆட்சியில் அவர்கள் படப்போகும் இன்னல்களை எண்ண தமிழக மக்களின் மீது எனக்கு அனுதாபமாகவே இருக்கின்றது. இவ்வாறு தேர்தலில் தி.மு.க தோல்வியடைந்ததையடுத்து வாக்காளருக்கு விடுத்த அறிக்கையில் கருணாநிதி தெரிவித்துள்ளார். [உ-9]

# தாய்வானை தாக்குவதை சீனா தவிர்க்க வேண்டும்

## தாய்வான் உப ஜனாதிபதி வேண்டுகோள்

(தைப்பே)

தாய்வான் உலக அரங்கில் சுதந்திர நாடாகமிளிர்வதற்கு சீனா துணை புரிய வேண்டுமென தாய்வானின் உப ஜனாதிபதி அனெட்லுவேண்டுகோள் விடுத்துள்ளார்;

தாய்வனை நோக்கி அணிவகுத்திருக்கும் நூற்றுக்கணக்கான சீன ஏவுகணைகளை அகற்ற வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, 300 முதல் 500வரையான ஏவுகணைகளை சீன கம்யூனிஸ்ட் தலைவர்கள் தாய்வானை நோக்கி நிறுத்தி வைத்துள்ளதுடன்,

தாய்வான் சுதந்திரப் பிரகடனம் செய்தாலோ அல்லது ஒருங்கிணைப்புப் பேச்சை இழுத்தடித்ததாலோ, தாம் தாக்குதல் நடாத்துவதை தடுக்க முடியாது என சீனா எச்சரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது, (உ-9)

# சோமாலிய அரசபடைகள் கிளர்ச்சியாளர் மோதல்

(மொகாடிசு)

சோமாலியாவில் துறைமுகம் ஒன்றைக் கைப்பற்றும் நோக்கில் அரசாங்கப் படைகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் கடுமையான மோதல்களில் 42 பேர் பலியாகியதுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

சோமாலியத் தலைநகரில் உள்ள துறைமுகம் ஒன்றைக் கைப்பற்றும் கிளர்ச்சிக்காரர்களின் முயற்சியில் வெற்றி ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அரச படைகளைத் துறைமுகப் பகுதியில் இருந்து பின்வாங்கிச் செல்லுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாய் கூறப்படுகிறது. (உ)

# இத்தாலியில் நடந்த தேர்தலில் மத்திய வலதுசாரி கட்சி முன்னணியில்

[றோம்]

இத்தாலியப் பொதுத் தேர்தலில் ஊடகத்துறையைச் சேர்ந்த பிரமுகர் ஒரிவரின் கட்சி முன்னணிக்கு வந்துள்ளது.

செவ்விய மொனிஸ்கோடி என்ற ஊடகத்துறைப் பிரமுகரின் தலைமையிலான மத்திய வலதுசாரி முன்னணி மற்றைய கட்சிகளும் கூடுதல் வெற்றி பெற்றிருக்கிறது.

இத்தாலிய கீழ்ச்சபையிலும் மேல்சபையிலும் ஏற்கனவே கூடுதல் இடங்களைப் பெற்றுள்ள இக் கட்சி விரைவில் ஆட்சிப் பீடம்ஏறும்:

உம் புட்டோ புஷி என்ற தீவிரவாதியின் தலைமையிலான கட்சி படுதோல்வியைத் தழுவிக் கொண்டுள்ளது:

இந்தத் தேர்தலில் மிகவும் மோசமாக ஏமாற்றமடைந்தவர் இடசாரிதுமுன்னணியைச் சேர்ந்த மேயர் என்பது குறிப்பிடத்தக்கது. [து]

## மேற்குவங்கத்தில் மாக்சிஸ்ட் ஆட்சி

[குல்கத்தா]

ஆறாவது தடவையும் மேற்கு வங்கத்தில் மாக்சிஸ் இடதுசாரிக்கூட்டணி ஆட்சி ஏற்படுத்தவாய்ப்புஏற்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநில சட்டசபைத்தேர்தல் 294 தொகுதிகளில் இடம் பெற்றது. இதில், 387 தொகுதிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இவற்றில் 200 இடங்களை மாக்சிஸ் கட்சி கைப்பற்றியுள்ளது. (து)

# கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அசிரத்தை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளவருவதில்லை என இப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். யாழ் மாவட்டகடற்றொழில் திணைக்கள அதிகாரி இது விடயத்தை கவனத்தில் எடுத்து வாரத்தில் இரண்டு தடவை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளை இப்பகுதியில் சந்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்: [உ-43]

# வடமராட்சி கிழக்கு அபிவிருத்திக்கு கூடுதல் நிதி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்:

இப் பகுதியின் வீதி திருத்த வேலைகள் சந்தை புனரமைப்பு சனசமூக நிலைய புனரமைப்பு பாடசாலை அபிவிருத்திப் பணிகளிற்கே கூடுதல் நிதி ஒதுக்கப்படவுள்ளன: [உ-43]

# விசாரணைகளுக்கு சமுகமளிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்

காணமற்போனோர் சம்பந்தமாக விசாரணையினை நடாத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர். பின்வருவோரின் சாட்சிகள் உறவினர்களை யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்:

★ நடராசா நவகிருஷ்ண முரளி ஊரியங்காடு, வல்வெட்டித்துறை. சாட்சி:- நடராசா மகேந்திரராணி

★ கோணேஸ்வரன் கதிரியாலிங்கம் 7 ஏ. விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ அன்ரன் நிக்ஸ்சன் குமரன் 24, சென் ஜேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ பாலரத்தினம் ஜெயமோகன் 183, மானிப்பாய், யாழ்ப்பாணம்.

★ சேவியதாஸ் றெஜினோல்ட் றூபராஜ் 310, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

★ ஜே. குகநேசன் 20, செந்தில் வீதி யாழ்ப்பாணம். [உ-10]

சென்றஇடத்தால் செலவிதா
தீதுஒரீயி
நன்றின்பால்உய்ப்ப(து)அறிவு

- குறள்

# வலம்புரி

## தர்ம அடியே திருத்தும்!

நாட்டில் யுத்தம், இடம் பெயர்வு, வறுமை இவற்றுக்கு மேலாக கசிப்பும், களவும் கட்டுமீறியநிலை. இப்படியே தமிழர்களின் வாழ்க்கை நகர்ந்துகொண்டிருக்கும் போதும்,

சொந்த மண், சொந்தக் காற்று என்ற நிம்மதியில் இருந்தாலும், நம் இளவல்களின் சேட்டையால் இளம் பெண் பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோர் நிம்மதியிழந்த நிலையிலேயே வாழ்கின்றனர்.

இளைஞர் கூட்டங்கள் வீதிகளில் பெண்களுடன் விடும் சேட்டை ஒரு புறமிருக்க, இப்போது அவர்களின் சேட்டை முற்றி வீடுகளில் சென்று சேட்டை விடும் அளவிற்கு நிலைமை உச்சமடைந்துள்ளது.

இச் சேட்டைகளுக்கு அந்தந்தப்பகுதிகளிலுள்ள இளைஞர்கள்ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். அதே போன்று ஒத்துழைப்பு வழங்குவோருக்கு மற்றோர் வீதியில் நன்றிக்கடன் தீர்க்கும்முகமாக கதவுகள் தட்டப்படுகிறது.

வீடுகளுக்கே[illegible]சென்று பெண்பிள்ளைகளின் பெயர் கூறி அழைக்கும் அளவுக்கு நடப்பு இருந்தால் அந்தப் பகுதி மக்கள் ஒன்று திரண்டு தர்ம அடி கொடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

அதே வேளை வீதிகளிலும், வீடுகளிலும் சேட்டை விடும் இளவல்களில் பெரும்பாலானவர்கள் உயர்தர மாணவர்களாக இருக்கிறார்களென்பது மிகவும் வேதனைக்குரிய செய்தியாகும்.

பாடசாலை மாணவர்களாக இருக்கும் போதே சமூகச் சீரழிவில் ஈடுபடுவார்களாயின் அவர்கள் எதிர்காலத்தில் மிகப் பெரும் ஆபத்தானவர்களாக மாறுவார்களென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

எனவே இதுவிடயத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் அதிக அக்கறை கொண்டு மாணவர்களுக்குப் புத்திமதி கூறி வழிப்படுத்துவது அவசியமாகும்.

கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் தவறான வழிகாட்டல் நெறி பிறழ்வுக்கு அடிப்படையாக அமையுமென்பதால்இளைஞர்களின் நடத்தை பற்றிய விடயத்தில் பெற்றோர்கள், பாடசாலை நிர்வாகம், சமூக அமைப்புக்கள் அதீத அக்கறை கொள்வதுமிக மிக அவசியமாகும்.

---

# தற்காலக் கல்விச் செல் நெறியில் முக்கியம் பெறும், தேசியக் கல்வியியற் கல்லூரிகள்

புத்தாயிரமாம் ஆண்டில் யாழ்ப்பாணமண்ணில்யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரி உதயமாயிற்று. இன்று அதற்கு ஒரு வயது. அந்த ஒரு வயதுக் குழந்தைக்குக் கிடைத்தஅனுபவங்கள் அளப்பரியன.

பிறந்துஒருகிழமையில்அகதியாகி, அலைக்கழிந்துகல்லூரி பெற்ற அனுபவங்கள்விபரிக்க முடியாதனகல்லூரியின் ஆரம்பம் முதல் அவதிப்பட்ட காலமூடாக இன்றுவரை அரவணைத்து சீராட்டிப்பாராட்டி பாலூட்டி வளர்த்த அன்புள்ளங்களை மறந்து விடமுடியாது.

அதன்வளர்ச்சியில்அக்கறை கொண்டு உதவி வரும் யாழ். மாவட்டவலயக்கல்விப்பணிப்பாளர்கள், கல்லூரியின் உயர்வுக்காகத் தோள் கொடுத்து உதவி வரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அதன் உபவேந்தர், பேராசிரியர்கள், மாணவர்கள், கல்வியில் அக்கறை கொண்ட யாழ்ப்பாணச்சமூகம் ஆகியன நன்றியுடன் நினைவு கொள்ளப்பட வேண்டியவர்கள். 'அவர்கள் பணி இறைபணி.

என்றும் நிலைக்கும் பணி'

### தேசிய கல்வியியற்கல்லூரிகள்

இலங்கையில் கல்வியியற்கல்லூரிகள் 1985 ஆம் ஆண்டில் ஆரம்பமாகின. உலக வங்கியின் அனுசரணையுடனும் ஆலோசனையுடனும் இலங்கையில் கல்வியியற் கல்லூரிகள் ஆரம்பமாகின. ஆசிரிய சேவைச்கு வேண்டிய முன் பயிற்சி அளிக்கும்நோக்குடன் இவை உருவாக்கப்பட்டன. 'எந்த ஒரு ஆசிரியரும் பயிற்சியில்லாதுவகுப்புக்குள் அனுமதிக்கப்படக்கூடாது என்ற கருத்தினை அடிநாதமாகக் கொண்டு கல்வியியற்கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. இலங்கையில் இன்று 16 கல்வியியற் கல்லூரிகள் உள்ளன; அவற்றில் இரண்டுஆசிரியநிறுவனங்களாகச் செயற்படவுள்ளன;

### கல்வியியற் கல்லூரிப் பாடநெறிகள்

இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பல்வேறுபட்ட 18 நெறிகள் உள்ளன; அவற்றுள் 8 நெறிகள் யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரியில் உள்ளன. அவையாவன,

ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், சித்திரம், நடனம், சங்கீதம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும் என்பனவாகும். இவை தவிர ஏனைய கல்வியியற் கல்லூரிகளில்,

தாய்மொழி, கிறிஸ்தவம், சமூகக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி, இந்துசமயம், மனைப் பொருளியல், விவசாயம், இஸ்லாம், புத்தசமயம், உடற்கல்வி ஆகிய நெறிகள் உள்ளன;

### அனுமதியும் கல்வித் தகுதியும்

கல்வியியற்கல்லூரிஅனுமதி க.பொ.த. [உ/த] தகுதியடிப்படையானது: மேற்படி பரீட்சையில் பெற்ற கூட்டுப் புள்ளி அடிப்படையில் மாணவர் அனுமதி பெறுகின்றனர்; குறிப்பிட்ட ஒருதுறைக்கு அனுமதி பெற வேண்டியிருப்பின் க.பொ.த. [உ/த] பரீட்சையில் அத்துறை சார்ந்தபாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கில பாடநெறிக்கு க.பொ.த. [சா/த] அதிவிசேட சித்தியும் நூலக விஞ்ஞானத்துறைக்குக.பொ.த. [சா/த] விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்;

### அனுமதிக்கான ஏனைய முக்கிய கட்டுப்பாடுகள்

25 வயதுக்குட்பட்டிருக்க வேண்டும். திருமணமாகாதவராகவிருத்தல் வேண்டும். வேறு தொழிலில் இருக்கக் கூடாது. வேறு நிறுவனங்களில் பதிவு செய்திருக்கக் கூடாது. கல்லூரியில் தங்கிக் கற்க வேண்டும். இவைகள் யாவும் சகல கல்வியியற் கல்லூரிகளுக்கும் பொதுவான கட்டுப்பாடுகள்;

### கல்லூரியின் செயற்பாடுகள்

கல்லூரியின் செயற்பாடுகள்யாவும் காலை 6.00 மணி முதல் இரவு10.00மணிவரை தினமும் நடைபெறும். இவற்றில் எவருக்கும் விதிவிலக்களிக்கக் கூடாது.

### விரிவுரையாளர்களும் தகுதியும் கடமையும்

விரிவுரையாளர்கள் 30 வயதுக்குட்பட்டவர்களாய் பட்டப்படிப்பில்முதலாம்,இரண்டாம் வகுப்புச் சித்தியுடன் இருத்தல் வேண்டும். சேவையில் இருப்பவர்கள் 40வயதுக் குட்பட்டவராயிருத்தலுடன் பட்டப்படிப்புடன் பட்டப்பின் படிப்பு,பட்டப்பின் கல்வி டிப்ளோமா திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவை பொதுவான தகுதிகள்:

## கலாநிதி தி. கமலநாதன்
## பீடாதிபதி
### யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

உலக வங்கியின் ஆலோசகர்கள் முன்மொழிவுடன் கல்வி அமைச்சால் வரையறைசெய்யப்பட்டவை யென்பதைத் தெளிவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

மாணவர்கள் போன்று விரிவுரையாளர்களும் கல்லூரிஎல்லைக்குள் வசித்து வழிகாட்ட வேண்டியது அவசியம். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விரிவுரையாளர்களுக்கான வதிவிட வசதியில்லாத காரணத்தினால் இவ்விடயத்தில் சற்றுத் தளர்வு உண்டு. இருந்தாலும் பல விரிவுரையாளர்கள் சுழற்சி ஒழுங்கு அடிப்படையில் இரவு நேரம் மாணவர்களுடன் தங்கியும் அந்நேரங்களில் வேண்டும் வழி காட்டியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது;

### நிதி வழங்கலும் கட்டுப்பாடும்

தேசிய கல்வியியற் கல்லூரிகள் மத்தியஅரசின்கீழ்இயங்குகின்றன. பிரதம ஆணையாளர் கல்வியியற் கல்லூரிகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றுகின்றார். அவரது நேரடி வழி காட்டலிலும் மேற்பார்வையிலும் கல்வியியற் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன பீடாதிபதிகள் [PRESIDENTS] கல்வியியற் கல்லூரிகளின் தலைவர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்;

கல்வியியற் கல்லூரித்தலைவர்கள்பீடாதிபதியெனதமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் அழைக்கப்படுகின்றனர். ஆங்கிலத்தில் PRESIDENTS என்று அழைக்கப்படுகின்றனர். பல்கலைக் கழகத்தில் பீடாதிபதிகள் DEANS என ஆங்கிலத்தில் அழைக்கப்பட கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதிகள் PRESIDENTS என்று பெயர் கொள்வது அவதானிக்கப்பாலது;

### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் புதிய துறைகள்.

எமது கல்லூரியில் இவ்வாண்டு இரண்டு புதிய பயனுள்ள துறைகள் ஆரம்பமாகியுள்ளன

1) ஆங்கிலம்

2) நூலக விஞ்ஞானமும் தகவல் தொழி நுட்பமும்;

என்பன அத்துறைகளாகும். இவ்விரண்டு துறைகளும் எமது கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டமை பெரும் பயன் கொண்டமை என்பது உறுதி. ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பன எமது பிரதேசச் சமகாலக்கல்விப் பிரச்சினைகளில் முக்கியமானவை. அப்பிரச்சினைக்குக் காலப்போக்கில் தீர்வு காண்பதற்கு வழி காணும் செயற்பாடாக இது அமையும் என்பது எமது நம்பிக்கை.

இந்த யுகம் தகவல் புரட்சி யுகம் தகவல் தொழிநுட்பமையமானது இன்றைய கல்விச்செல்நெறி இதைச்சீராக உள்வாங்கிக் கொண்டது. எமது கல்லூரியில் இவ்வருடம் ஆரம்பமாகியுள்ள நூலக விஞ்ஞானமும் தகவல் தொழிநுட்பமும் என்ற பாடநெறி தற்கால உலகின் Internet. Emal Fax போன்ற தகவல தொடர்பு நுட்பங்களின் வளர்ச்சி மேற்படி கல்வி நெறியின் செயல்முறைக்கு வழிகாட்டி நிற்கின்றன.

இந்த நவீன செல்நெறியை உள்வாங்கி எமது பிரதேச மாணவர்களுக்கு பயனளிக்கும் நோக்கில் இப்பாட நெறி இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக நூலகர், உதவி நூலகர் ஆகியோரின் அளப்பரிய உதவிகள் இத்துறைக்கு கிடைத்துள்ளதுடன் வேண்டும் ஊக்கமும் கிடைத்துள்ளது;

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 8 துறைகள் உள்ளன. 14 வகுப்புகள் உள்ளன. 10 விரிவுரையாளர்களேயுள்ளனர். மிகக் கடினமாக உழைக்கின்றனர். தமது சக்திக்கு மேலாக உழைக்கின்றனர். இறைவனருளும் ஆசியும் அவர்களுக்கு நிச்சயமுண்டு.

''அன்னசத்திரம் ஆயிரம்
கட்டலில் கோடிபுண்ணியம்
ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்''

பாரதி

### தேசிய கல்வியியற் கல்லூரிகளும் முறையியலும்!

கல்வியியற் கல்லூரிகளில் பயன்படுத்தப்படும் கற்பித்தல் முறை சாதாரண கற்பித்தல் முறைகளில் வேறுபட்டவை. செய்து கற்றல், கண்டறி முறை செயல்கொள் ஆய்வு என்பன சிறப்பாக கல்வியியற் கல்லூரிகளில் பயன்படுத்தப்படும் முறையியலில் முக்கியமானவை அம்முறையியல் புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் சிறப்பாக விதித்துரைக்கப்பட்டுள்ளமையும், கையாளப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

### பயிற்சியும் காலமும்

தேசிய கல்வியியற் கல்லூரிப் பயிற்சிக்காலம் 3 வருடங்கள் ஆகும். அதில் 2 வருடங்கள் வதிவிடத்துடன் கூடிய உள்ளகப்பயிற்சி கொண்டதாகவும் இறுதிவருடம் கட்டுறுப் பயில்வு (Internship) நடைபெறுவதாகவும் உளளது.

கட்டுறுப் பயில்வு காலத்தில் ஆசிரிய பயிலுநர்கள் பாடசாலையொன்றி இணைக்கப்படுவார்கள் அங்குள்ள சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலுடன் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஒருவரின் மேற்பார்வையின்கீழ் தொழிற்படுவர். இச்செயற்பாட்டிற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணை மிக அவசியமான தொன்றாகும்.

உள்ளகப் பயிற்சி காலத்தில் நடைபெறுகின்ற கற்பித்தல் பயிற்சி, பாடசாலையைப் புரிந்துகொள்ளல் போன்ற செயற்பாடுகள் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆதரவுடன் செயற்படுத்தப்படும்.

### பயிலுநர்கள் பிணைமுறியும் மருத்துவ சோதனையும்.

கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள முதல் மாதத்திலேயே பிணைமுறிக்கும் மருத்துவ சோதனைக்கும் உட்படவேண்டியது கட்டாயமானதாகும். அவர்களது மேற்படி தகவல்கள அவரவர் சுயவிபரக் கோவையில் இடப்பட்டு பயிற்சி முடிவில் நியமனம்பெறும் மவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

### தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் தொடருறு கல்வியும்

இன்று ஆசிரியர்களுக்குத் தொடருறுகல்வி (Continuing Education வழங்குவது முக்கியம் பெற்றுள்ளது. இச் செயற்பாட்டிலும் கல்வியியற் கல்லூரிகளின் பங்கு முக்கியமானது தொடருறுகல்வி நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் கல்வியியற் கல்லூரியிலிருந்து அதற்கான ஆளணியினை வழங்கல்போன்ற கல்விசார் நடவடிக்கைகளுக்கு ஆசிரிய நிலையங்களுக்குதவி நிகழ்ச்சித் திட்டத்தை சிறப்புறச் செய்யவேண்டிய பணியும் கல்வியியற் கல்லூரிகளுக்குண்டு. இதற்காக கல்வியியற் கல்லூரிகளில் ஒரு உப பீடாதிபதி (தொடருறு கல்வி) நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தொடருறுகல்வி தொடர்பான பணிகளைத் தனது விரிவுரை நேரம் தவிர்ந்த காலத்தில் வலயக் கல்விப்பணிமனையுடனும் ஆசிரிய நிலையங்களுடனும் இணைந்து திட்டமிட்டு ஆற்ற வேண்டிய கடமைக் கூறுகளைக் கொண்டவர்.

### அதிபர், ஆசிரியர்கள்பொறுப்பு

இன்று கல்வியியற் கல்லூரிகள நாட்டிற்குத் தேவைப்படும் ஆசிரியர்களை வழங்கும் நிறுவனங்களாக வளர்ச்சி பெற்றுள்ளன எமது தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் எதிர்கால நாட்டில் பாடசாலைகளில் மாணவர்களைப் பயிற்றுவித்தல் அவசியமானது கல்வியியற் கல்லூரிகளில்உள்ள கற்றற்துறைகளை உள்வாங்கி அவற்றிற்கு வழங்கலை ஏற்படுத்தக்கூடிய வகையில் பாடசாலை மாணவர்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். இது காலத்தின் தேவை எதிர்கால எம் சமூக வளர்ச்சிக்கு எம்மாலியன்ற பணி.

---

## பூர்த்தி விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரின் ஓராண்டுப் பூர்த்தி விழா இன்று பீடாதிபதி தி. கமலநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது; [உ]

# தென்மராட்சி மக்கள் மீளக்குடியமர
# விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்
## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி நேற்று மீண்டும் பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். நகரில் ஒன்று கூடிய தென்மராட்சி மக்கள் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டு யாழ் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்குச் சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் 'இடம் பெயர்ந்த இருள் வாழ்வு வேண்டாம்', 'சொந்த இடம் சென்று வாழ அனுமதி வேண்டும்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

இதே வேளை ஊர்வலமாகச் சென்ற மக்கள் மத்தியில் உரையாற்றிய வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா:- உங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றேன், நீங்கள் சொந்த வீடுகளுக்கு விரைவில் செல்ல நடவடிக்கை எடுப்பேனென்று உறுதியளித்துள்ளார். (இ)

### அரசு வருடாந்தம்
# 850 அ. மெ டொலர் செலவிட்டும் புலிகளை வெல்ல முடியவில்லை

(லண்டன்)
தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கவென அவர்களுக்கெதிரான யுத்தத்துக்காக அரசாங்கம் ஆண்டு தோறும் 850 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டும், ஒரு லட்சம் படையினரை யுத்தத்தில் ஈடுபடுத்தியும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியவில்லை.

இவ்வாறு இலங்கையின் யுத்தமும் பொருளாதாரமும் என்ல ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்றை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

அவ் ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இலங்கையில் 50 வருட அரசியல் யுத்தம் நடைபெற்று வருகின்ற அதே வேளை 25வருட ஆயுத யுத்தமும் பெருவளர்ச்சி பெற்றுள்ளது.

யுத்தத்துக்கென செலவிடப்படும் தொகை பொருளாதாரத்தை பாதிப்படையச் செய்துள்ளதுடன் இலங்கை உலகில் மிகப்பெரிய கடனாளியாக மாறவும் வகை செய்துள்ளது.

இலங்கையின் யுத்தமுடிவுகள் அம்மக்களை வெள்ளையுடைதரிக்கவே வைக்குமென்று அவ் ஆய்வில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### ஜனாதிபதியுடன்.-.

கட்சித்தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா சம்பந்தன் ஆகியோரைச்சந்தித்துப்பேசியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவை நேற்றுமாலை சந்தித்த தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் சுமார் இரண்டு மணித்தியாலங்களாக சமாதானத்தின் அகலப் பாதையைக் குறுக்குமளவிற்கு மனம்விட்டுப் பேசியுள்ளார் என்றும் நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் பேச்சுவார்த்தையின்போது இடம்பெற்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக தூதுவர் எந்தவிதமான தகவல்களையும் வெளியிட மறுத்துவிட்டார்.

இருப்பினும், ஜனாதிபதி சந்திரிகாவுடனான பேச்சுக்களின் போது புலிகளின்தடை நீக்கம் யுத்த நிறுத்தம் 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' ஆகியன பற்றி பேசியதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வேயின் சிறப்புப்பிரதிநிதி எரிக்சோல்ஹெய்முடன் நோர்வேயின் வெளிநாட்டமைச்சின் பிரதிநிதிகள் இருவரும் இலங்கை வந்துள்ளனர்

இக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகாவுடனான பேச்சுக்களை முடித்துக் கொண்டு இன்று வன்னிக்கு செல்லவுள்ளனர்.

வன்னி செல்லும் இவர்கள் இரண்டு நாட்கள் அங்குதங்கியிருந்து விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனையும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே; பிரபாகரனையும் சந்தித்துப்பேசி நல்லதொரு முடிவுக்கு வருவார்களென இராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. (இ)

### குறை...

பிக்காத பொதுமக்கள் கிராம சேவகர் ஊடாகவும் பாடசாலை மாணவர்கள் தமது அதிபர் ஊடாகவும் விண்ணப்பங்களை சமர்ப்பித்து அடையாள அட்டை பெற்றுக் கொள்ள முடியுமென்று அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அடையாள அட்டைக்குவிண்ணப்பிப்பவர்களுக்கு பிரதேச செயலர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஒத்துழைப்பை வழங்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். [இ]

### தமிழக.-.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அரசாங்கம் இந்திய மத்திய அரசுடன் நெருக்கமான நல்லுறவைப் பேணி வருறது. அதேபோன்று தமிழ்நாட்டின் ஜெயலலிதாவின்அரசுடனும் நல்லுறவைப் பேணவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேசுவதைத் தடுக்கவும், அவர்களுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்தவும் கோரி பொதுமக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதென வும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

அற்புதமான வடிவமைப்புக்களைக் கொண்ட அழகியதங்க நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்
நியூ ராதிகாஸ் நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கி/ 1981)

### நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகர சபையின்முன்னாள்முதல்வர் திருமதிசறோஜினி யோகேஸ்வரனின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளைநடைபெறும்:

கூட்டணியின் யாழ் தலைமைக்காரியாலயத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு சிரேஷ்ட உபதலைவரும் எம்பியுமான ஆனந்தசங்கரி தலைமை தாங்குவார். [ந]

### யாழ். மாநகரசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகர சபையின் சுகாதாரக் குழுக்கூட்டம் நாளை காலை குழுத்தலைவர் செல்லைய விஜயரட்ணம் தலைமையில்நடைபெறும். [ந]

### யாழ் நீதிமன்றில் 23 பேர் ஆஜர்

[யாழ்ப்பாணம]
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ் குடாவில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 23பேர் நேற்று யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை விசாரணை செய்தநீதவான் இ த. விக்கினராசா சந்தேக நபர்களை எதிர்வரும் 29ம் திகதி வரை தொடர்ந்தும் தடுப்புக் காவலில்வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். [வ]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், ஜோதிகா. மீனா, மணிவண்ணன் நடித்த
ரிதம்
(சினிமாஸ்லிமிற்றெட்) வெளியீடு
11-00, 2-30 பு. நே:
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீல்ஸ்) (கி-1977)

### குண்டுடன் நடமாடிய இருவர் கைது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அலவி மௌலானாவின் வீட்டுக்கு அருகில் நேற்று முன்தினமிரவு கிறனைட்டுடன் நடமாடிய இரு முஸ்லிம் வாலிபர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் உதவியாளர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு ஏறாவூர் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்;

மேற்படி இரு நபர்களும் முஸ்லிம் காங்கிரசின் தீவிர ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. [இ]

### கண்காணிப்பு குழுக் கூட்டம்

(வட்டுக் கோட்டை)
வலிகாமம் மேற்கு பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழு கூட்டம் இன்று மு.ப.10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது;

பிரதேசதிணைக்கள அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். (உ-24)

### யுத்தநிறுத்தமும

நடத்த வேண்டுமென வலியுறுத்தினார்.

இச்சந்தர்ப்பத்தில்விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை குறித்து எரிக்சோல் கேட்ட போது தடை கட்டாயம் நீக்கப்பட வேண்டுமென சம்பந்தன் கூறினார். [இ]

### பிரிவுத்துயர் பகிர்வு

**திருமதி பவளம்மா (திரவியம்)**

சங்கானை கிழக்கு சேத்துப் பிடிச்சி வீதியைச்சேர்ந்த திருமதி பவளம்மா (திரவியம்) 14-05-2001 காலமானார் அன்னாரின் தகனக் கிரியைகள் சங்கானை கரச்சி இந்து மயானத்தில் நடைபெற்றது.

தகவல்: நாகமணி மகேந்திரலிங்கம்
[பெறாமகன்]

CD மூலம் புதிய, பழைய பாடல்கள், பக்திப் பாடல்கள் பதிவுசெய்து கொள்ள
மிலேனியம் ஓடியோ வீடியோ சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
(கி-1982)
T P. 3646

### விடுமுறையில் சென்ற சிப்பாய் கொலை

மாத்தளை வறக்காமுளையைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவரை பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவரை பெண்ணின்கணவர் போத்திலால் குத்திகொலை செய்துள்ளார்;

வடபகுதி போர் முனையில் கடமையாற்றி வந்த ரஞ்சித் குமார (வயது23) என்றசிப்பாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்;

மேற்படி சிப்பாய் கடந்த வாரமே விடுமுறையில் வீடு சென்றிருந்தார். (ந-5)

### மன்னார் கடலில் புலிகள் தாக்குதல்

மன்னார் நடுக்குடாப்பகுதியில்இலங்கைகடற்படையினர் மீது விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை 2மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை நேற்றிரவு 11 30 மணியளவில் மன்னார் வவுனியா வீதியில் உயிலங்குளம் பகுதியில விசேட அதிரடிப்படையின்காவலரண்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார்தாக்குதலில் இரண்டு அதிரடிப் படையினர் காயமடைந்து வவுனியாஇராணுவவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்இதுஇவ்வாறிருக்கவவுனியா செலான்வங்கிக்கிளையில் சக்திவாய்ந் கிரனேட் பார்சல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (வ)

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில் செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில் - - - - -



நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, - - - - - யாழ்ப்பாணம்.
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [கி-1993]
நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது;